தமிழ்நாடு சட்ட மன்றம்

புதன்கிழமை, 1973 மார்ச் 28.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
31 JUL 1973
MADRAS

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 3-30 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிடப்பட்ட வினாக்கள்.

@* 285 *Q*.—Thiru V. ISVARMURTI (on behalf of Thiru S. VELLA PANDIAN): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the purposes for which the Building Materials Display Centre, Chepauk, is kept; and

(*b*) the number of persons who have visited the Centre so far?

சென்னை, சேப்பாக்கத்தில் கட்டிடக் கட்டுமானப் பொருட் காட்சி நிலையம்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்:) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, சேப்பாக்கத்தில் கட்டிடக் கட்டுமானப் பொருட் காட்சி நிலையம் வைத்து வரப்படுவதன் நோக்கங்கள் யாவை ?

(இ) இது வரை அந்நிலையத்தைச் சென்று பார்வையிட்டவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) புத்தம் புதிய வழிமுறைகளையும், புதிய கட்டிடப் பொருட்களையும் சேகரித்தும், அவைகள் கிடைக்கும் இடங்களைத் தெரியப்படுத்தவும் இக்கட்டிட மத்தியக் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

(இ) சுமார் 10 நபர்கள் ஒவ்வொரு நாளும் இக்காட்சியகத்திற் வந்து செல்கின்றனர்.

@27—3—1973ஆம் தேதி வினப்பட்டியலிருந்து ஒத்திப் போடப்பட்டது.